அன்புமக்களே!

தமிழ்க் கத்தோலிக்க மாதாந்த வெளியீடு பங்குனி 2013. ஒளி 17. கதிர் 195
TAMIL CATHOLIC MONTHLY PUBLICATION MARCH 2013 YEAR 17. VOL 195

திருத்தந்தை பிரான்சிஸ் இன்னும் தனது எளிய பழைய வாழ்வுமுறையே பின்பற்றுகிறார்

பங்குனி மாதம் 17. 2013



மார்ச்,15,2013. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ், உலகின் 120 கோடிக் கத்தோலிக்கரின்தலைவர்

ஸ்தாபிதம்

ஆனிமாதம்; 1995

முகவரி
2387 Eglinton Ave East Unit # 05
Scarborough. On. M1K 2M5
E-mail:- dtpasto

தொலை பேசி (416) 752 - 6999
தொலைநகல் (416) 752 - 7586

தயாரிப்பு + வெளியீடு
கனடாத் தமிழ்க் கத்தோலிக்க சங்கம்..

ஆசிரியர் குழு
பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் செல்வராசா
திரு தோமாஸ் டேவிட்
சகோதரி மரினா அந்தோனிப்பிள்ளை

ஆலோசனைக் குழு
அருட் தந்தை வார்கிஸ் சகாயராஜா
அருட் தந்தை அந்தோனிப்பிள்ளை தோமாஸ்
அருட் தந்தை திபுசியஸ் சைமன்

தொழில் நுட்ப உதவி
திரு தோமாஸ் இருதயநாதன்
செல்வி மரினா சவுந்திர நாயகம்.

விநியோகஸ்த்தர்கள்
கனடாத் தமிழ் கத்தோலிக்க சங்கம்
தன்னார்வத் தொண்டர்கள்.

கிடைக்கும் இடங்கள்

ரொறொன்ரோவில்:-
புனித அந்தோனியார் தேவாலயம்
லூர்துமாதா தேவாலயம்

ஸ்காபரோ:-
புனித மரிய கொறற்றி தேவாலயம்

ஜேன்&பிஞ்:-
புனித ஒகஸ்ற்ரின் தேவாலயம்

மிஸிசாக்காவில்:-
சிற்றி சென்றர் வியாபார
ஸ்தாபனங்களில்

மாக்கம்:-
தோமாஸ்மோர் தேவாலயம்
பொனிபஸ் தேவாலயம்

டொன்மில்ஸ்:-
புனித 23ம் அருளப்பர் தேவாலயம்

தமிழ் கத்தோலிக்க புதுவாழ்வுக் குழு

தமிழ் மொழிகற்கும் வகுப்புகள்
மெக்கா சிற்றி வர்த்தக
ஸ்தாபனங்கள்

ஆதரவு

கனடாத் தமிழ் கத்தோலிக்க சங்கம்.

''நம்பிக்கை ஆண்டின் விசுவசுவாசம்''

அன்புச் சகோதரர்களே!

கத்தோலிக்க கிறீஸ்த்தவர்களின் விசுவாசம் விசுவாச மந்திரத்தில தரும் சத்தியங்களே ஒன்று ''அர்ச்சிஷ்டர்களின் ஐக்கிய பிரயோசனத்தையும் விசுவாசிக்கிறேன் என்பதாகும். இன்று இதைப்புனிதர்களின் உறவு என்பர். புனிதர்களின் உறவே இன்றைய எமது திருச்சபை ஆகும். ஆதனை வெற்றித்திருச்சபை, (புனிதர்கள்) இவ்வுலக செயற்படு திருச்சபை, துன்புறும் திருச்சபை என்று பிரித்தும் கூறியுள்ளார்கள். இறப்பின் பின்பு அவரவா் பாவ பேற்று நிலைகளுக்கேற்ப உத்தரிப்பு உண்டு. இதனை யேசு தமது வாழ்நாளிலே கூறிய பணக்காரன் ஏழையும் என்ற உவமையில் இருந்து அறியலாம். இறந்தபின் பணக்காரன் பாதாளத்தில் வேதனைப்படுவதையும், ஏழையான லாசரஸ், தந்தை ஆபிரகாமுடன் இருப்பதையும் அறிந்து, விரலால் நீரைத்தொட்டு தனது நாவை நனைக்குமாறு கேட்சிறான். ஆபிரகாம் மறுத்துரைப்பது பற்றி லூக் 16: 19-31 வரை வாசித்தறியலாம். பழைய ஏற்பாட்டிலே மக்காபேயர் 13 (38) இறந்தோருக்காக வேண்டுதல் பற்றி விவிலிய பாரம்பரியம் கூறி நிற்பதைக்காணலாம் காலம் காலமாக இறந்தோருக்காகப் பல்வேறு சமயக்கிருத்தியங்கள் பல்வேறுவழிகளில் பல்வேறு மக்கள் நிறைவேற்றுகிறார்கள். நாங்கள் இறப்பின் பின் சீவியம் உண்டு என ஏற்பவர்கள்.

புனிதர்களின் உறவே திருச்சபை எனில், ஒருடலான திருச்சபையின் நற்பேறுகளும் பங்கீடு செய்யப்படவேண்டும். யேசுக்கிறீஸ்த்துவே இந்த ஒருடலான திருச்சைபயின் தலைவர். கிறீஸ்த்து வழி வந்த தேவதிரவிய அநுமானங்களும் பங்கிடப்படவேண்டும்.

விசுவாசிகள் இவ்வுலகிலே நற்பேற்றால் ஈட்டிய நற்கனிகள் என்ற திரவியத்தை நாம்வேண்டில் நமக்காவும், இறந்த ஆன்மாக்கள் மோட்ச மடையவும் பங்கிடமாட்டார்களா? யேசுவே வழி, மோட்ச இராச்சியம் எங்களுக்குள்ளேயே என்பன எல்லாம், நாம் யேசுவிடம், யேசுவழியாக வேண்டினால் பரமபிதா-தமது பேறான மகனின் வேண்டுதலை எற்கமாட்டாரா? தேவமாதா என்றென்றும் எங்கள் எல்லோரதும் தாயாக்கப்பட்டுள்ளார். அவர் என்றென்றும் எமக்குப் பரிந்து பேசும் தாய். அவர் வழி கேட்டால், கானான் ஊர்க்கலியானத்திலே பரிந்து பேசும் தாய் உத்தரிக்கும் ஆன்மாக்களுக்கு ஈடேற்றம் அளிப்பார் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. கிறீஸ்த்துவின் ஒருடலான வெற்றித்திருச்சபையில் இருக்கின்ற சகல புனிதர்களும், வாழும் திருச்பையினலான நாங்களும் துன்புறும் திரச்சபையினரான உத்தரிக்கின்ற ஆன்மாக்களும் ஒருவர் ஒருவருக்காய் வேண்டாலாம், வேண்டவேண்டும் என்பதே புனிதர்களின் உறவாகும்.

முன்னோர்கள் வழியிலே நோக்கிம் ''பஞ்சளுன்ய'' என்ற தானக்கிருத்தியங்கள் ஒரே கடவுளுக்கும், புனிதர்களுக்கான வேண்டுதலாயும் இறந்த ஆன்மாக்களுக்கான வேண்டுதலாயும் உள்ளதை அறிவோம். இறந்தவர்களை நினைந்து அவர்களுக்காய் தந்தையருக்காய் அநுட்டிக்கும் விரதங்களும் உண்டு. வழிவழிவந்த விவிலியம் தரும் நேசம் அறிந்த நாம், இறந்த ஆன்மாக்களை மறந்து. அவர்கள் ஈடேற்றத்திற்காய் வேண்டாது விடுவது நன்றி மறந்த திருச்சபை அங்கத்தவர்களாகிவிடுவோம்.

இயேசுக்கிறிஸ்த்து. எல்லாக்கற்பனைகளையும் இரண்டு கற்பனைகளில் அமைத்துக் கூறினார். எல்லாவற்றிக்கும் மேலாக இறைவனை நேசிப்பது இரண்டாவது. எம்மைப்போல் எம் அயலவனையும் நேசிப்பது. ''நான் உங்களை நேசிப்பதுபோல் நீங்களும் ஒருவர் ஒருவரை நேசியுங்கள் என்றார். யேசுபிரான் கூறியதன்படி நாம் நேசித்த எங்களை நேசித்து இறந்து போன எமது நண்பர்களை எமது கிறிஸ்த்துவின் ஒருடலான எமது மரித்த விசுவாசிகளுக்காக வேண்டாது விடலாமா! துய்மை, தூயவர் புனிதம் என்ற சொற்கள் மோட்ச பேற்றுடன் இணைக்கப்படுகின்றன. தூய்மை அற்ற எதுவும் மோட்சம் போக முடியாது. நாம் தூய்மை அடையவேண்டும். நாம் ஏதோ ஒரு வகையில் குறைபாடுள்ளவர்களே; நரகம் என்பது ஆத்துமத்தை, இறையிலிருந்து பிரித்து தூரத்தள்ளிவிடும். யேசுவே இரக்கம். இரக்கமே இறையைத்தனது புதல் வனான கிறீஸ்த்துவை, எமது மீட்பராக அனுப்பி, மீட்புப் பணியை மனித குலத்திற்கு அளித்தது. இதைவிட நற்செய்தி நமக்கேது? இரக்கமான இறையிடம் இறந்த ஆன்மாகக்ளுக்காக வேண்டினால் இறை இரக்கம் தூரமாகப்போய் விடுமா!

ஆதலின் தூய ஆவி என்பது தரும் ஞானம் பக்தி விமரிசை திடம் ஆன்மிக உணர்வு மன்னிப்பு போன்றன உணர்வோம் பெறும் வரப்பிரசாதங்கள் எமது சகோதர விசவாசிகளோடு பங்கிட்டு யேசுவின் வழி பொய்யாது ஒழுகி உலகத்து உயிர்தீத்த நமது சகோதர விசுவாசிகளின் ஆன்மாக்காக மன்றாடுவோம். யேசுவின் அன்பு நித்தியமே, அது சத்தியமே, என்றவழி நின்று, புனிதர்களின் உறவு என்ற விசுவாச சத்தியத்தில் உயர்வோம், திருச்சபை என்ற ஒருடல் யேசுவின் தலைமையில் உலகெலாம் பரவி மாந்தரின் ஈடேற்ற வழியாகி, எஞ்ஞான்றும் எல்லா விசுவாசிகளையும் இரட்சிப்புப் பெற வழிவகுப்பதாக.

''இறை ஆசியும் சமாதானமும் எல்லோரும் பெறுக.'

மறைபனி தோமாஸ் டேவிட்.

புனித வாரம்

தவக்காலத்தின் ஆறாவது வாரம் புனித வாரமாக அனுசரிக்கப்படுகிறது. இது பரிசுத்த வாரம் என்றும் அழைப்படுகிறது. இறை மக்கள் இவ்வாரத்தில் ஏனைய வார நாட்களை விட மிகவும் அக்கறை யாக இருந்து தங்களுடைய ஆன்மீக காரியங் களையும் .ஒறுத்தல் முயற்சிகளையும் செய்வார் கள். சிறப்பாக கடந்த வாரங்களில் ஒறுத்தல் முயற்சி செய்தவர்களும் கூட இவ்வாரத்தில் தங் களை ஒறுத்து பாஸ்கா விழாவிற்கு ஆயத்தம் செய்வதை அவதானிக்கலாம். கிறிஸ்தவர்கள் தங்களுடைய அவசரமற்ற அவசியமற்ற செயற் பாடுகளை சற்று ஒதுக்கி விட்டு புனிதவார வழி பாடுகளில் பக்தியோடு கலந்து கொள்வார்கள்.
இவ்வாரத்தில் இறைமக்கள் வாழுகின்ற சூழலில் ஒருவித அமைதியையும்.பக்தி உணர்வையும் புத்து ணர்வையும் அதைவேளையில் சோக உணர்வை யும் அவதானிக்க முடியும்.ஆலயங்களிலும். இல் லங்களிலும் இசைக்கப்படுகின்ற பசாம் கீதத்தை இக்காலத்தில் இறைமக்கள் கொண்டுள்ள உணர்வுபூர்வு ஈடுபாட்டின் வெளி அடையாளமாகக் காணலாம்.
புனித வாரம் ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு அன்று ஆரம்பமாகிறது.கிறிஸ்து பெருமான் தமது பாஸ்கா மறைபொருளை நிறைவேற்ற எருசலேமிற்கு வருகை தந்ததை திருச்சபை இன்று நினைவு கூருகின்றது.வருடம் தோறும் பாஸ்கா விழாவைக் கொண்டாட இயேசு எருசலேமிற்கு வருவதுண்டு. ஆனால் இம்முறை தன்னையே பாஸ்காப் பலியாக நிறைவேற்றிட வருகிறார்.
இயேசுவும் அவருடைய சீடர்களும் எருலேம் நகருக்குள் நுழைந்த போது மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் பொங்க ஒலிவக்கிளைகளை உயர்த்திப் பிடித்து "தாவீது மகனுக்கு ஓசான்னா! ஆண்டவர் பெயரால் வருபவர் வாழி என்று அரச மரியாதை யுடன் வரவேற்பதைப் போன்று கிறிஸ்து வின் பதிலாளாய் விளங்கும் குருவானவரை இறை மக்கள் குருத்தோலைகளை தமது கையில் ஏந்தி மகிழ்ச்சியோடு வரவேற்று கிறிஸ்துவின் எருசலேம் வருகையை நினைவு கூருகின்றனர்.

இன்றைய வழிபாடு

1.குருத்தோலைப் பவானி
2.திருப்பலி என இருபகுதியைக் கொண்டுள்ளது
3.குருத்தோலை புனிதபபடுத்தும் சடங்கு நடைபெறும் வேளையில் இயேசு எருசலேம் நகருக்குள் நுழைந்தமை தொடர்பான இறைவார்த்தைப் பகுதியை நற்செய்தியிலிருந்து குருவானவர் வாசிப்பார். பின்னர் மறையுரை ஆற்றுவர். திருப்பலியில் நற்செய்தி வாசகம்
இயேசுவின் பாடுகளை சித்தரிக்கும் வரலாற்றுப் பகுதியிலிருந்து உரையாடல் முறையில் வாசிக்கப்படும்.இந்த புனித வாரத்தில் வியாழன் .வெள்ளி சனி ஆகிய புனித நாட்கள் மிகவும் முக் கியமான நாட்களாகும்.பாஸ்கா வியாழன் உச்சக் கட்ட வழிபாடு புனித வியாழனோடு ஆரம்பமாகி புனித சனி இரவோடு முடிவடைகின்றது.இந்த நாட் களில் நடை பெறும். வழிபாடுகள் மூன்று வேறு பட்ட வழிபாடுகள் அல்ல. மாறாக. அவை யாவும் ஒரேயொரு வழிபாடாகவே அமையும்.

புனித வியாழன்

இந்த நாளில் ஆண்டவரின் இராவுணவு நிகழ்வை நினைவு கூறுகின்றோம்.திருச்சபையின் மிகப் பழ மையான வழக்கப்படி இறைமக்கள் பங்கு பெறாத திருப்பலிகள் எல்லாம் இன்று செய்யப்படும்.மாலை வேளையில் கடைசி இராவுணவுத் திருப்பலி இறைமக்கள் அனைவரும் முழுப் பங்கேற்க கொண் டாடப்படும்.இந்த நாளில் கிறிஸ்து அன்பின் அடையாளமாகவும். தமது உடனிருப்பை உணர்த் தும் அருட்சாதனமாகவும். உறவின் சின்னமாகவும். பகிர்வின் அடையாளமாகவும்.சமத்துவத்தின் சின்ன மாகவும். நற்கருணையை ஏற்படுத்தினார். சீடர்க ளின் பாதங்களைக் கழுவி அன்புக் கட்டளையை வழங்கினார். தமது பணி வாழ்வின் புனித கருவி யாக பணிக் குருத்துவத்தையும் ஏற்படுத்தினார்.
இன்றைய நாளின் வழிபாடுகள் நான்கு பகுதிக ளாக வகுக்கப்பட்டு நிகழ்த்தப்படுகிறது.
நான்கு பகுதிகள்
1.இறைவாக்கு வழிபாடு
2.பாதம் கழுவுதல்
3.நற்கருணை வழிபாடு
4.நற்கருணை இடமாற்றப் பவனி என்பனவாகும்.

நற்கருணை இடமாற்றப் பவனியானது நம் மீட்பரான இயேசு தம் திருத்தூதர்களுடன் ஜெஸ்தமெனி எனும் தோட்டத்திற்கு புறப்படுவதை நினைவு கூரும் வகையில் இடம் பெறுகிறது."ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா" என்று கேட்க இயேசுவை இறைமக்கள் தனியாகவும் குடும்பமாக வும் குழுவாகவும் ஒன்று கூடி தரிசித்து ஆராதனை செய்வார்கள்.

குறிப்பு :-

இந்த நாளில் திருத்தலம் மந்திரிக்கம் திருப்பலி காலையில் இடம்பெறும். திருப்பலியில் ஆயர் நோயாளிகளின் எண்ணையையும் திருமுழுக்கு ஆயத்தக்காரரின் எண்ணையையும் மந்தரித்து. கிறிஸ்மாத் தைலத்தைத் அர்ச்சிப்பார். ஆயரும் குருக்களும் கூட்டுத் திருப்பலியாக இத்திருப் பலியை நிறைவேற்றுவார். இது குருக்கள் ஆய ரோடு கொண்டுள்ள ஒன்றிப்பை வெளிப்படுத்திக் காட்டுகிறது. இன்று குருக்கள் தமது குருத்துவ வாக்குறுதிகளை அனைவர் முன்பாகவும் புதுப் பித்துக் கொள்வார்கள்.இந்த திருத்தைலம் மந்திரிக் கும் திருப்பலி எமது மறைமாவட்டத்தில் குருக்க ளின் வசதி கருதி புனித திங்கள் மாலையில் இடம் பெறும்.

புனித வெள்ளி

இந்த நாள் ஆண்டவருடைய திருப்பாடுகளை நினைவு கூரும் நாளாகும்."ஓசானா" என்று இயே சுவை வாழ்த்திய அதே மக்கள்"ஒழிக" என்று கோஷமிட்டு அநீதியாக தீர்ப்பிட்ட நாள். ஆனா ல்பாவங்களையும். சாபங்களையும். ஆனை த்து அநீதிகளையும் இயேசு தமது மரணத்தால் வெற்றி கொண்ட நாளும் இதுவே இறைசித்தத்தை நிறை வேற்ற சிலுவை மரணத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டநாளும் இதுவே.இன்றை நாளில் சிலு வைப்பாதைத் தியான வழிபாடு காலையில் அல் லது வசதியான நேரம் இடம் பெறும்.இன்றைய நாளில் ஒரு சந்தியும்.மாமிசத் தவிப்பும் அனுசரிக் கும் படி திருச்சபை இறைமக்களை அழைத்து நிக்கின்றது.
இன்றைய நாளின் வழிபாடு பின்வரும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.
1.இறைவாக்கு வழிபாடு
2.திருச்சிலுவை ஆராதனை
3.திருவிருந்து

ஆண்டவர் இயேசு தம்மையே வெறுமையாக்கியதன் அடையாளமாக இன்று பீடம் வெறுமையாக காட்சியளிக்கும். குருபீடத்தின் முன் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து செபிப்பார்.இறைமக்களும் முழந்தாளிட்டு தமது பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்பார்.

புனித சனி

இன்றைய நாள் பாஸ்காத் திருவிழிப்பு என்று அழைக்கப்படுகின்றது. தொன்று தொட்டே இவ் விரவு ஆண்டவருடைய வருகைக்காக விழித்திரு ந்து காத்திருக்கும் இரவாக இருந்து வந்துள்ளது. (யாத் 12:42) நற்செய்தியில் காண்பது போல் .ஆண்டவரின் வருகையை எதிர் கொள்ள எரியும் விளக்குகளுடன் ஆயத்தமாக இருந்தவர்கள் போன்று இன்றைய இரவில் இறைமக்கள் காத்தி ருப்பார். இங்கு ஒளி இறைவனைக்குறிக்கும் அடையாளக் குறியாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனெனில் ஒளியின் வடிவில் தான் இறைவன் முட்புதரில் மோசேக்கு காட்சி தந்தார். ஒளியின் வடிவில் தான் இயேசுவின் பிறப்பு அறிவிக்கப் பட்டது. இன்று புதுத் தீ புனிதப்படுத்தி பாஸ்காத் திரியில் ஏற்றப்படும். இங்கு ஒளியின் அடையாளம் இயேசுவின் உயிர்ப்பை உறுதிப் படுத்துகின்றது

ஏனென்றால் " உலகின் ஒளி நானே "என்று இயேசு மொழிந்தார். பாஸ்காத்திரியில் காணப்படும் சிலுவை அடையாளம் மானிடம் முழுவதும் சிலுவையால் மீட்கப்பட்டதையும் அல்பா ஓமேக்கா என்ற கிரேக்க எழுத்துக்கள் இயேசு என்றென்லும் நிலையானவர் ஏன்ற கிரேக்க எழுத்துக்கள் இயேசு எனறென்லும் நிலையானவர் என்பதையும். எழுதப் பட்டிருக்கும் ஆண்டு இயேசு என்றென்லும் நிலை யானவர் என்றென்லும் நிலையானவர் என்பதையும் எழுதப்பட்டிருக்கும் ஆண்டு இயேசு காலங்களை யும் யுகங்களையும் கடந்தவர் மாட்சியும் ஆட்சியும் அவருக்கே உரியன. என்பதையும் குறிக்கின்றன. ஐந்து சாம்பிராணி மணிகளும். இயேசுவின் ஐந்து திருக்காயங்களை ஞாபகப் படுத்துகின்றன.

இன்றைய வழிபாடுகள் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளன.

1.திரு ஒளி வழிபாடு
2.இறைவாக்கு வழிபாடு
3.திருமுழுக்கு வழிபாடு
4.நற்கருணை வழிபாடு என்பனவாகும்.

பாஸ்கா இரவு விடுதலையின் இரவு மனித குலம் மீட்புப் பெற்ற இஸ்ராயேல் மக்கள் தங்களுக்கு இறைவன் செய்த வல்ல செயல்களுக்காய் இறை வனுக்கு நன்றிப் பண் இசைத்தனர்.அதே விதமாக நன்றியை வெளிப்படுத்தும் முகமாக குருவானவர் பாஸ்காப் புகழுரையைப் பாடுவார்.

இன்றைய இறைவார்த்தை வழிபாடு மீட்பின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. பழைய ஏற்பாட் டிலிருந்து ஒவ்வொன்றுமாக ஒன்பது வாசகங்கள் வாசிக்கப்படும்.

இவ்வேளையில் கிறிஸ்துவின் உயிர்ப்பை வெளிப் படுத்தும் முகமாக குருவானவரால் "உன்ன தங்களிலே "பாடப்படும். (ஆலயமணிகளும் ஒலிக்கும்.) தொடர்ந்து தண்ணீர் புனிதப்படுத் தப்பட்டு திருமுழுக்கு வாக்குறிதிகளை புதுப்பித்தல். இறைமக்களை புனித நீரால் புனிதப்படுத்தல் போன்ற நிகழ்வுகள் இடம் பெறும். மேலும்

நற்கருணை வழிபாட்டின் மூலம் அன்னையாம் திருச்சபை கிறிஸ்துவின் பாடுகள். மரணம் உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறை பொருளை பக்திச் சிறப்புடன் கொண்டாட அழைத்து நிற்கின்றது. இத்தோடு புனித வியாழனோடு ஆரம்பித்த வழிபாடுகள் நிறைவு பெறுகின்றன. இக்கருத் துக்கள் அனைத்தையும் நன்கு உணர்ந்தவர்களாக புனித வார வழிபாடுகளில் பக்தியோடு பங்கு பற்றுவோம்.

உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்தார் உயிர்த்தெழுந்தார்.
உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்தார்.

நம் ஆண்டவர் இயேசு
இயேசு இயேசு உயிர்ந்தெழுந்தார்.
கல்லறை இருளில் இருந்து
ஒளிக்கு அழைத்தார் அல்லேலூயா
சாவின் மீது என்றென்றும் வெற்றி கொண்டார்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவர்
உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா.
சிலுவை சாவில் இருந்து வாழ்வைத் தந்தார்.

தவமெனும் பாதையில் செபமெனும் தீபம்

சிலுவையை வணங்கிடும் தவக்காலம்
சிலுவைகள் தாங்கிடும் தவக்காலம்
சிந்தைகள் தெளிந்திடும் தவக்காலம்
உறவினைத் தேடிடும் தவக்காலம்
உண்மையை உணர்த்திடும் தவக்காலம்
இயேசுவின் வழியே தவக்காலம்
அன்னைமரியின் நெறியே தவக்காலம்
உரிமையின் உரையே தவக்காலம்
வறுமைகள் விலகிட தவக்காலம்
வாய்மையின் ஒளியே தவக்காலம்
கண்ணீர் சிந்திடும் தவக்காலம்
காரிருள் போக்கிடும் தவக்காலம்
எண்ணங்கள் உயர்ந்திடும் தவக்காலம்
ஏழ்மையை உணர்த்திடும் தவக்காலம்
எளிமையை விளக்கிடும் தவக்காலம்

மீட்பினை உணர்த்திடும் தவக்காலம்
ஆட்சியை அழைத்திடும் தவக்காலம்
அன்பினை விழைத்திடும் தவக்காலம
அருளினைப் பொழிந்திடும் தவக்காலம்
வன்பினை நீக்கிடும் தவக்காலம்
வாய்மையை உயர்த்திடும் தவக்காலம்
பரிசேயரை அழைத்திடும் தவக்காலம்
பாவங்கள் போக்கிடும் தவக்காலம்
பாடுகள் சுமையே தவக்காலம்
பரமனின் பாதையே தவக்காலம்
சிலுவைப் பாதையே தவக்காலம்
சீரான வாழ்வே தவக்காலம்
கருணை நிலையே தவக்காலம்
காருண்ய நிதியே தவக்காலம்
அமைதியின் அரசே தவக்காலம்

மனம் மாறுவோம்

மாறிடும் அவனியிலே மாறாத அன்பு கொண்டார்-
இறைவன் மாறிடும் மனிதரிடத்திலே மாறாத
நம்பிக்கை கொண்டார் - இறைவன்
காலங்கள் பல சென்றாலும் எமக்காக காத்திருந்தார் - இறைவன்
இயற்கையின் மத்தியிலே எம்மை இறை சாயலாய் படைத்திட்டார்- இறைவன்

யுத்தங்கள் வந்தாலும் எம்மால் உயிரிழப்புக்கள் ஏற்பட்டதும் எம்மால்.
அழிவுகள் வந்ததும் எம்மால் .பாவங்கள் அதிகரித்தும் எம்மால் மனிதாபிமானம் அழிந்ததும் எம்மால்

உலகெங்கும் அழுகையின் குரல்கள்
வையகமெங்கும் இரத்தக் கறைகள்
பாரெங்கும் பாவ மனிதர்கள் பூமியெங்கும் பாதாள அலைகள்
மனமே அற்றுப்போன மனிதருக்காய் உன்னத மகனை அனுப்பினார்-இறைவன்
அன்பே அற்றுப்போன மக்களுக்காய் செங்கடலை இரண்டாக பிரித்திட்டார் -இறைவன்
நன்றி கெட்ட மானிடருக்காய் பல இறைவாக்கினரை தோற்றுவித்தார்- இறைவன்

தொழில்நுட்ப வளர்ச்சியினாலே மாறினான் மனிதன்

அநாகரீக போக்கினாலே மாறினான் மனிதன்
இலௌகீக உலகினிலே ஊறினான் மனிதன்
குடி போதையிலே ஊறினான் மனிதன்

ஆலயம் செல்வதும் .இறைவனை வழிபடுவதும் வெளிவேடம்
உதவி செய்வதும் .தானம் வழங்குவதும் ஆடம்பர வேடம்
நடிப்பிற்காய் வேடமிட்டு நடித்தான் -மேடை வேடம்
தினமும் பாரினிலே வேடமிட்டு நடிக்கிறான் வாழ்வே வேடம்

பாவ உலகில் மலர்வுக்காய் மனம் மாறுவோம்
இலௌகீக மோகத்தை விட்டு மனம் மாறுவோம்
இறை அரசை வரவழைக்க மனம் மாறுவோம்
உண்மையான மனஸ்தாபம் பெற மனம் மாறுவோம்

மாறிடும் உலகினில் நாமும் மாறுவோம்
மாறிடும் மனிதரில் நாமும் மாறுவோம்
மாறாத அன்புடன் நாமும் மாறுவோம்
மாறாத விசுவாசத்திடன் நாமும் மாறுவோம்

மதிகெட்டு நடக்கும் பெண்ணின் அழகு பன்றிக்கு போட்ட வைர மூக்குத்தி
நீதிமொழிகள 11:22

உன்மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருபவன் மீதும் அன்பு கூர்வாயாக லூக்.10:27.

தேடுவார் கண்டடைகின்றனர், தட்டுவோருக்குத் திறக்கப்படும். லூக்.11:10.

பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள். லூக். 24:27.

போராடும் உலகில் கிறிஸ்தவ வாழ்வில்விசுவாசப் பயணம்

பசுமைகளும் இனிமைகளுமாயன்றி
பாறைகளும் சுமைகளுமாய்
மறை சொல்லும் நிறைவுகள்
நிறைவுகள் காணாக் குறைகளாய்
மனமும் வெறுமையாய்
பணப் பெட்டியும் வெறுமையாய்
வறுமையும் வெறுமையுமாய்
துன்பமே ஆகாரமாய்
தேவனுக்காய் முள்முடிகள் ஏனோ?
முடிச்சு மாறிகளும்
துன்மார்க்களும் மாளிக்கைகளில்
நாமேன் யேசுவுக்காய் சிலுவையை சுமப்பான்?
இதிலென்ன விசுவாசமும் பயணமும் ....
பார்வையெங்கும் பசியுடன்
ஒட்டிய வயிறுகளும்
பாதையெங்கும் முட்களாய் விரிந்து
பாதங்களில் குருதியுடன் பயணம் யாருக்காக.........
இதிலென்ன விசுவாசமும் பயணமும்.........
தீயோர்கள் பூரிப்பின் தேரோட்டம்
எமக்கேன் போராட்டம்
யாருக்காய் பாடுகள் .....
இதிலென்ன விசுவாசமும் பயணமும்
பொய்யர்கள் செழித்துக் கொழிக்க
எமக்கேன் சிறுமையின் ஆணிகள் !
யேசுவுக்காய் காணிக்கையா?
விடைகாணா வினாக்களாய்
விடைதேடியலைந்து களைத்துப் போய்
தள்ளாடும் கால்கள்
பணமின்றி பசுமையின்றி வாழ்வே –சுமையாய்....
கிறிஸ்தவ வாழ்வில் போராட்டம்......
விசுவாசமும் தள்ளாடுகிறது.
செய்தெல்லாம் நாசமாய்
சிந்தனைகள் மோசமாய் பொருள்தேடிடும்
நேசமாய் பாவத்தின் மூழ்கிடும் தேசம் !
போராடும் உலகில்........கிறிஸ்தவம்
இதிலென்ன விசுவாசமும் பயணமும்
கிறிஸ்துவுக்காய்... தாழ்மையும்... பொறுமையும்
...நமக்கேன் சவுக்கடிகளும்
காயங்களும் குருதியும்.....நாமும பணம் தேடி சுகம் தேடி நரகத்தின் சவுக்கடிகளும் காயங்களும் குருதியும்.........
நாமும் பணம் தேடி... சுகம்

ஒரு மரண தண்டனைக் கைதியின் கடைசி இரவா....? தவக்காலம்

ஒரு மரண தண்டனைக் கைதியின் கடைசி இருவ மிகவும் கொடூரமானது. ஏரிமலைக் குழம்பிற்குள் நீச்சலடிப்பு போல் உடலும் மனமும் வலிக்கும் தன் பாவம் .குற்றம் அனைத்தையும் நினைத்து வெதும்பி அழுவான் கண்ணீர் சிந்துவான்.... இருந்தும் என்ன பயன்? நாளைய சூரிய உதயம் தான் அவன். தன் வாழ்வில் காணப்போகும் கடைசி உதயம் .அவனுக்கு சாவு நிச்சயம்.விடுதலை கிடையாது.

ஆனால் “தவக்காலம் இன்னும் உனக்கு வாழ்வு இருக்கிறது” என்று சொல்லும் காலம். “ நான் உனக்காக உயிரைக் கொடுக்கும் அளவு உன்னை அன்பு செய்கிறேன். என்று உறவு மலரும் காலம். தவக்காலம் ஒரு பாலைவன அனுபவத்திற்கு அழைக்கிறது. இந்த உலகில் எல்லாம் கிடைத்தால் கடவுள் வேண்டாப் பொருளாக மாறிவிடுவார். இதனால் தான் உலகப் பொருட்களின் சுமையை துறந்து உண்மைப் பொருளான தன்னை தேடுமாறு கடவுள் அழைக்கிறார். உலகச் செல்வங்களுள் நான் மூழ்கிக்கிடக்கும் வரை பாலைவன

அனுபவம் சாத்தியமற்றது.

தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும். தேடல் என்புத உள்ளவரை வாழ்வில் ருசி இருக்கும்" இதுவரை நாம் ஒய்வு இன்றி .போதிய உறக்கமின்றி. நீங்கள் வரும் வரை அவலோடு காத்திருக்கும் அன்பு மனைவிக்கு ஒரு புன்னகைபுரிய நேரமின்றி .தேடினீர்கள் .பொருள் .பணம். பட்டம். புகழ்….களியாட்டம்….. எதுவுமே உங்களுக்கு ஆறுதல் தரவில்லை. நிம்மதி தரவில்லை.ஆனந்தக் குதுாகலம் தரவில்லை.எனவே தான் அன்புள்ள தந்தை உங்கள் பரிதாப நிலை கண்டு உங்களை அழைக்கிறேன்."என்னைத் தேடு சகலமும் உன்னைத் தேடி வரும்" என்கின்றார்.இதையே இறைவாக்கினர் ஆமோஸ் மிக அழகாகச் சொல்லுவார்.
"ஆண்டவரைத் தேடுங்கள் நீங்கள் வாழ்வீர்கள்" (ஆமோ: 5:6)

தவக்காலம் கடவுளாடு தனித்திருக்கும் காலம்.மிஞ்சியிருக்கும் வாழ்க்கையை அச்சமின்றி ஆனந்தமாய் வாழ ஆண்டவர் இயேசு செய்துத போல 40 நாள் ஆண்டவரோடு தனித்திருங்கள். பழைய பாவங்கள் கழைந்து புதிதாய் பிறக்க ஆண்டவரோடு தனித்திருந்து சக்தி பெறுங்கள்.

இது மன மாற்றத்தின் காலம் நோய் முற்றிவிட்ட குணமாக்க முடியாத புற்றுநோயாக மாறிவிடாதிருக்க காலத்தோடு தரப்படும் அழைப்பு. "சுடலை ஞானங்களும் .கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரமும் பயனற்றுத மகனே' என்று சொல்லி சக்கேயு போல லேவி போல முழுதாய் மாறு என்கிறது இக்காலம் இம் மன மாற்றத்திற்கு நோன்பு.ஒறுத்தல் தர்மம் செய்தல் நிறைந்த உதவி புரியும்.

இது இயேசுவின் பாடுகளை நினைத்து ஒப்பாரி பாடுவதோடு ஒயக்கூடாது. நெற்றிச் சாம்பல் உனக்கு நினைவுபடுத்து மூடனே …..இன்று இரவும் உன் இதயத்துடிப்பு நின்று போகலாம். சிலுவை உன் மீட்பின் சின்னம் உன் அடிமையின் கால் கழுவ இப்போதே ஆயத்தமாகு. பொருளை அல்ல உன்னைப் பிய்த்துக் கொடுப்பது தான் உயிருள்ள அர்ப்பணம்.

"பாவம் இனிப்புத் தடவி கசப்பு" மனமாற்றம் .ஒப்பரவு. "கரும்பை நுணியில் இருந்து அடிநோக்கி உண்புத போன்றுத"சாவுக்குள்ளே வீடுகட்டிக்குடியிருப்பதினும் சில நிமிடத்துன்பங்கள் தாங்கித் தான் பாரேன். உனக்கு இன்னும் உயிர் வாழ மனம் மாற வாழ்க்கையை கொஞ்சம் இனிப்புச் சுவையோடு ஆனந்தமாய் வாழ்ந்து பார்க்க காலம் இருக்கு .ஏனெனில் இது உனக்கொன்றும் மரண தண்டனைக் கைதியின் கடைசி இரவு அல்லவே.

இறைவன் இயல்பாக இயற்கையின் மரணம் உனக்குத் தரும் வரை காத்திருந்து இன்பம் துன்பம் போதனை சாதனை போன்றவைகளை உன் வாழ்வில் அனுபவித்து அனுபவ வாழ்வாக உயர்ந்து மடிந்து முடிவதே வாழ்வாகும் ஆகவே

இவைன் உன்வாழ்வை வழி நடத்துவாராக என்று காத்திருந்து வாழ்வவை நிறைவு செய்வாய்யாக.

யார் உங்களுடைய நல்ல நண்பன்?

நீங்கள் மகிழ்வுற்றிருக்கும் போது உங்கள் மகிழ்ச்சியை இரண்டு மடங்காக்குபவனும். நீங்கள் துக்கப்படும்போது உங்கள் துக்கத்தை அரைமடங்குறைப்பவனுமே உங்களுடைய நல்ல நண்பன்.

அப்படியான நண்பன் ஒருவன் உங்களுக்கு உண்டா?

இல்லை என்பீர்களானால் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை உங்கள் நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள்.வேதம் சொல்லுகிறது" நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை.உன்னைக் கைவிடுவதுமில்லை"
என்று அவர் சொல்லியிருக்கிறாரே அதனாலே நாம் தைரியம் கொண்டு கர்த்தர் எனக்கு சாகாயர்.நான் பயப்படேன் மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே " (எபி 13:5-6)

நிம்மதி தேடி உன்னிடம் வந்தேன்

அன்பான பண்பான தாய் தந்தைக்கு மகளாக பிறந்தால் அனற் ஆனால் அவளின் விதி பெற்றோருடன் பிரியமாக வாழ அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை. ஒரு நாள் அனற்றும் அவளின் பெற்றோரும் பயணம் சென்ற பேருந்து விபத்துக்குள்ளாகியது. இதிலிருந்து தப்ப இயலாது என அறிந்து அனற்றின் தாய் தன் கையிலிருந்த குழந்தை அவற்றை யன்னல் வழியாக வெளியே போட்டாள்.அவளாவது உயிர் பிழைதிதுக் கொள்ளட்டும் என்ற எண்ணத்துடன் தான் அவ்வாறு செய்தாள்.பச்சிளம் குழந்தையான அனற் அன்றிலிருந்து அனாதையானாள்.
தாய்முகம் அறியாத அவள் அனாதை இல்லத்திலே சேர்க்கப்பட்டு வளர்க்கப்பட்டாள். சில வருடங்கள் கடந்தன."அனற் நாங்கள் தான் உன் பெரியம்மா"பெரியப்பா என உறவு கொண்டாடினார்கள்.உன்னைத் தேடி அலைந்தோம். இப்போது தான் உன்னைக் கண்டுகொள்ள முடிந்து" எனப் பெரும் கதை கட்டினர். பெரியம்மா அவளை கட்டித்தளுவி முத்தம் கொடுத்தாள்.அன்புக்காக ஏங்கிய அனற்றிற்கு அது பெரும் ஆறுதலாக இருந்தது. தனக்கென ஒரு குடும்பம் இருக்கின்றது என்ற சந்தோசம் அவளுக்கு ஏற்பட்டது.பெரியம்மா பெரியப்பாவின் வேண்டுகோளுக்கிணங்க அனாதை இல்லத்து பொறுப்பாளரிடம் விடைபெற்றுவிட்டு அவளுடன் அவர்கள் வீட்டிற்குச் சென்றாள்.
அனற் சில வாரங்கள் பெரியம்மாவின் குடும்த்தினருடன் நாட்களை இனிமையாக கழித்தாள்.இந்த இனிமை சில நாட்கள் மட்டும் தான் நீடித்தது. பெரியம்மாவின் பொய்யான அன்பிற்கு

இலக்கானாள்.அனற் பெரியப்பாவின் தீய வார்த்தைகள் அவளை முள்போல் தைத்தன.உடன் பிறவா சகோதரியின் ஏளனம் அவளை மேலும் துன்பப்படுத்தியது.ஊதியம் இல்லா மேலைக்காரியானாள்.அனற் பார்ப்பதற்கு அழகாகவும் கண்ணைக்கவரும் தோற்றமும் பண்பான பேச்சும் கொண்டிருந்தாள்.
அவளின் அழகை வைத்தே பணம் சம்பாதிக்கலாம் என்பதே பெரியம்மா வீட்டாரின் திட்டமாக இருந்தது. அனற் அறிவுக்கூர்மை உடையவளாக இருந்தாள். இருந்தும் அவளின் சூழ்நிலை காரணமாக அவளால் முழுமையாகக் கல்வி கற்க இயலாமற்போய்விட்டது.இருந்தும் இயன்றவரை படித்தாள்."பள்ளிக்கு சென்ற நீ படித்து பட்டம் பெற்று என்ன சாதிக்கப் போகிறாய்?' என அடிக்கடி பெரியம்மா திட்டுவாள். அவள் வீட்டிலே அனற்றை முடக்கி வைத்தாள்.எடுத்துக் கூட பேசத் துணிவில்லாத அனற் திணறிப் போவாள். மனதுக்குள்ளே அழுது புலம்பினாள்.ஒருநாள் ஒரு மனிதர் வீட்டிட்கு வந்தார்.பார்ப்பதற்கு பயங்கரமான தோற்றம். பெரும் செல்வந்தா்.கை கழுத்து நிறைந்த நகை சுமார். நாற்பது வயது இருக்கும்.பெரியம்மா அவரை அழைத்து அறிமுகம் செய்தார். இவளுக்கு எதுவுமே புரியவில்லை.அவா் போன பிற்பாடு விசாரித்தான்.அவா்தான் அனற்றை திருமணம் செய்யப்போகிறானாம் என பதில் கிடைத்தது.துவண்டு போனாள் அனற் அவனிடம் பெரியப்பா குடும்பம் பணம் கடன் பெற்றுள்ளார்கள்.அந்தக் கடனை அடையவும் அவனின் சொத்துக்களை தாங்களும் அனுபவிக்கவுமே இந்த ஏற்பாடு தனது மகளுக்கு அந்தப் பணத்தை கொடுத்து திருமணம் செய்யலாம் எனவும் பெரியம்மா திட்டம் வகுத்தாள். அந்த மனிதன் ஏற்கனவே திருமணமானவன். அத்தனை தீய பழக்கங்களையும் கொண்டவன் இதையெல்லாம்பெரியப்பா நன்றாக அறிந்திருந்தும் இவ்வாறு முடிவு செய்தது. ஆச்சரியம் தான். அனற் அழுது அழுது அவளின் கண்ணீரும் வற்றிவிட்டது.ஒருவாறு தீடீரென ஒரு முடிவு எடுத்தாள்.யாருக்கும் தெரியாமல் அங்கிருந்து ஒடிச்சென்று ஆலயத்திற்குச் சென்றாள்.அங்கிருந்த நற்கருணை நாதர் முன்பாக மண்டியிட்டு அழுது தன்னை ஒப்புக்கொடுத்தாள்.கண்களை இறுக மூடியபடி "நிம்மதி தேடி உன்னிடம் வந்தேன். நீதான் நான் தேடும் நிம்மதியான வாழ்வைத் தரவேண்டும்.என அவரிடம் சரணடைநதாள். அப்போது அனற் என கூறியபடி தோள்மீது ஒரு கை பட்டது. திடுக்கென திரும்பிப்பார்த்தாள்.அனாதை இல்லத்து அன்னை அம்மா எனக் கூறியபடி தன் சோக கீதம் பாடினாள். அன்னை அவளை ஒரு மடத்தில் சேர்த்துவிட்டாள். அனற் அங்கே இருந்து படித்துப் பட்டம் பெற்று ஒரு அருட்சகோதரியாகி இன்று பல அனாதைக் குழந்தைகளுக்கு அன்பான அன்னையாக வாழ்ந்து வருகிறாள்.

மனிதம்மதிக்கப்படுகிறதா? மிதிக்கப்படுகின்றதா?

தனி மனிதனின் சிந்தனைகள் மதிக்கப் படுகின்றனவா? அல்லது அந்த மனிதன் சிந்தனைகள் மிதிக்கப்படுகின்றனா? என்று நாம் சிந்தித்தால் நாம் இலகுவில் உலகம் எந்த திசையில் சென்று கொண்டு இருக்கின்றன என்று கண்டு கொள்ள முடியும் எனவே நாம் தனி மனிதனை முதலில் பார்ப்போம்!

மனிதன் முதலில் தன்னுடைய பிறப்பு பற்றிய சிந்தனையில் மதிக்கப்படுகின்றானா? அல்லது மிதிக்கப்படுகின்றானா? ஒவ்வொரு மனிதனும் தான் பிறக்கும் போது நல்லவனாகத்தான் பிறக்கின்றான் ஆனால் அவன் பிறந்த பின்பு அவனுக்கு எப்படியான சிந்தனைகள் அவனை ஆட்டிப் படைக்கின்றன என்று பார்த்தால் அனைத்துமே அவன் தன்னுடைய பிறப்புக்கு பின் செய்யும் நன்மை தீமை செயல் வடிவங்களே ஆகும் இங்கு சாஸ்திரமோ அல்லது அவனது பிறப்போ காரணம் இல்லை என்று தெரிய வரும் உதாரணத்திக்கு வறிய குடும்பத்தில் ஒருவன் பிறந்தாள் அவன் அப்பிறப்பின் பின்பும் வறியவனாகத்தான் இருப்பான் என்று இல்லை ஆனால் அப்பிறப்பாள் அவன் துணிந்து நின்று தன்னை தயார்ப்படுத்திக் கொண்டு வாழ்க்கைத்தரத்தை தான் தன்னுடைய நம்பிக்கை மூலம் உழைப்பில் முன்னுக்கு கொண்டு வந்து தனது அடுத்த தராதரத்திற்கு இட்டு செல்கின்றான்.

அத்தோடு அவன் நின்று விடுவதில்லை மாறாக மேலும் மேலும் அவன் தன்னுடைய வளர்ச்சியைப்பற்றி சிந்தித்து செயல் ஆற்றுகின்றான்.

ஆனால் சிந்திக்க முடியாதவன் அல்லது தன்னில் நம்பிக்கை இல்லாதவன் தான் மற்றவர்களால் இழி நிலைக்கு இட்டு செல்வதற்க்கும் வழி வகுக்கின்றான் இப்படிப்பட்டவர்கள் தாங்களே தங்களுக்கு என்று ஒரு வழி அமைத்து தான் தான் பெரியவன் என்றும் மற்றவர்கள் எல்லோரும் தன்னை விட சிறியவர்கள் புத்தி இல்லாதவர்கள் என்றும் மற்றவாகள் வாழத் தெரியாதவர்கள் என்றும் தன்னை தானே பெரியோர் ஆக்கிக் கொள்கின்றனர் அதனால் தன்னையே தான் திருத்திக் கொள்ள முடியாத நிலைக்கு இட்டு சென்று தனது பிறப்பால் தான் இழந்ததாக இறுதியில் மனிதம் மதிக்கப்படாமல் மிதிக்கப்பட்டு கடைசியில் தன்னை குற்றம் சாட்டுவதற்க்குப் பதில் தனது பிழைகளை தான் உணர்ந்து கொள்ளாது தான் விட்ட தவறுகள் திருத்திக்கொள்ள முயலாது தனக்கு நேர்ந்த எல்லா கெட்டதுக்கெல்லாம் மற்றவர்கள் மேல் பழிச்சொல்லைப் போட்டுவிட்டு தான் தப்பிக்க பார்க்கின்றான்.

ஆகவே இந்த உலகத்தில் இப்போது நடக்கும் சம்பவங்கள் தான்தோன்றித் தனமாக தன்னாதிக்கத்துடன் செயல்படும் விகிதசாரம் கூடிக்கொண்டு செல்கிறது இதனல் உலகின் பல பாகங்களில் அரசியிலிலும். சமயத்திலும். சூமகத்திலும் சராசரியாக மனிதன் மதிக்கப்படுகிறானா? என்ற ஆய்வு மிதிப்படுகின்றான் என்ற பதிலை பகிரங்கப்படுத்தி நிக்கிறது.

நம்பிக்கையின் ஆண்டு

உலகளாவிய திருச்சபையின் விசுவாசம் புதுப்பிக்கப்படவும் புத்துயிர் பெறவும் வேண்டி திருத்தந்தை 11.10.2012.24.11.2013 வரை அனைத்துலக அரசராக இயேசுக்கிறிஸ்துவின் பெருவிழா வரையான காலப்பகுதியை விசுவாச ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளார்.

திருச்சபையின் கருவூலுஞ்குளீஞ் இருந்து தூய நற்கருணை பற்றியும் இறைவார்த்தை பற்றியும் நன்கு தியானித்து சிறப்பித்த எமக்கு அவற்றை மேலும் திடப்படுத்த இவ்விசுவாச ஆணடு உதவும் என்பதில் சந்தேகமில்லை.நம்பிக்கையின் நாட்சியத்தின் பகிர்தலின் விசுவாச அனுபவத்தை நோக்கி கிறிஸ்தவர்களாகிய நாம் உருளும் உலகில் பயணிக்க வேண்டியுள்ளது.

கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவுப்பாலம் அல்லது உறவின் ஆழம்.விசுவாசத்தின் மூலமே கட்டியெழுப்ப முடியும். இயேசுவின் சீடர்களில் ஒருவரான
தோமையார் இயேசு உயிர்த்தெழுந்ததை நம்பவில்லை. இயேசுவின் ஆணிகள் கடாவப்பட்ட கரங்களில் தனது விரலை இட்டுப்பார்த்தாலே ஒழிய நான் நம்பப்போவதில்லையென அவர் ஆணித்தரமாக கூறுகின்றார்.இயேசுக்கிறிஸ்து அவர் முன் தோன்றிய போது தோமையார் விசுவாசம் கொண்டார்."என்ழனக் கண்டதால் நீ விசுவாசித்தாய் காணாமல் விசுவாசிப்போர் பேறுபெற்றோர்"என ஆண்டவா திருவாய் மலர்ந்ததை தோமை யாருக்கு மட்டுமல்ல எமக்கும் தான் .நாமும் புதுமைகளைக் கண்டால் வேண்டுதல்கள் கிடைக்கப் பெற்றால் மட்டுமே கடவுளைக் நம்புகிறோம்.இல்லையேல் "கடவுள் இருக்கின்றாரா?மனிதன் கேட்கின்றான்.

பெரும்பாடுள்ள பெண் இயேசுவின் ஆடையின் நுனியை தொட்டால் தான் குணமடைவேன் என நம்பி அவர் மேலாடையைத் தொட்டு குணமடைந்தாள். அவள் விசுவாசம் அவளை இரட்சித்தது.கடுகளவு விசுவாசம் இருந்தால் மலையைப் பார்த்து பெயர்ந்து போ என்று சொல்ல அம்மலை பெயர்ந்து போகும் என கிறிஸ்து கூறியது எமக்கு நன்கு தெரியும் ஆனால் இத்தகைய விசுவாச வாழ்வை இன்று நாம் வாழ்கின்றோமா? அவவிசுவாசிகளாக வாழ்ந்து விளக்கில் விழுந்த வீட்டில்களாக அவலங்களையும் துன்பங்களையும் சோதனைகளையும் வேதனைகளையும் தனிமைகளையும் புறக்கணிப்புக்களையும் நாம் இன்று சந்தித்து கேள்விக்குறிகளோடு கேள்விக்குறியாகி நிற்பதற்கு காரணம் ஆண்டவனில் நாம் விசுவாசம் கொள்ளாமல் உலகத்தையும் எலகப் பொருட்களையும் விசுவசிப்பதே ஆகும்.கடவுளை மறந்து கடவுளை மறுத்து ஆமணக்கம் செடியின் அமர்ந்த எலியா போலவும் நினிவேக்கு கப்பலேறிய யோனாவைப் போலவும் எலக மாயைகளில் சிக்குண்டு கிடக்கும் மனித குலத்திற்கு "நம்பிக்கை ஆண்டு" கிறிஸ்தவ வாழ்வில் புத்துயிர்ப்பைக் கொடுக்க வேண்டும்.

எத்தனை தடவை விசுவாசப்பிரமாணச் செபத்தை நாம் உச்சரித்தாலும் உள்ளத்தில் நாம் இறைவன் மீது உண்மையான விசுவாசம் கொண்டவர்களாக வாழாது விடின் அதனால் எவ்வித பயனுமில்லை. உலகம் எம் முன்னால் இயேசு எம் பின்னால்"என்ற எம் வாழ்க்கை முறையை இவ்விசுவாச ஆண்டில் மாற்றியமைத்து இயேசுவை எம்முன்னால் நிறுத்தி உண்மையான விசுவாச வாழ்வு வாழ்ந்து உண்மைக் கிறிஸ்தவர்களாக உலகிற்கு ஒளியாகவும் .உப்பாகவும் இருப்போம்.

"ஆண்டவரே! ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் :
என் ஆன்மா குணமடையும்.

ஏன் நாம் செபிப்பதில்லை?

செபத்தின் வல்லமையே மனிதனுக்கு அளிக்கப்பட்ட உன்னதமான கொடையாகும் ஆயின் நாம் ஏன் செபிப்பதில்லை?

படைப்பில் அதி உயர்ந்தவரிடம் பேசும் உரிமை உயர்ந்தவரிடம் பேசும் உரிமைசெபத்தில் நமக்குக் கிடைக்கிறது ஆயின் நாம் ஏன் செபிப்பதில்லை?

செபம் செய்யும் ஆற்றலே மனிதனுக்குக் கிடைக்கும் மாபெரும் சக்தியாகும் ஆயின் நாம் ஏன் செபிப்பதில்லை?

தமது மக்களுடன் பேசுவதே இறைவனது உள்ளத்தின் பேரவாவாகும் ஆயின் நாம் ஏன் செபிப்பதில்லை?

செபிப்போருக்கு இல்லாதது ஒன்றுமில்லை ஆயின் நாம் ஏன் செபிப்பதில்லை?

செபத்தில' நிலைகொண்டவர் எவரும் தளர்ச்சியடைந்ததோ தடுமாறியதோ இல்லை
ஆயின் நாம் ஏன் செபிப்பதில்லை?

விசுவாசிகளின் ஐக்கிய சமூகம் !

இந்த மாதம் ஆன்மாக்களின் மாதம். திருச்சபையின் போதனை கள் யாவும் விவிலியத்தை ஆதாரமாய் கொண்டவையாகும். எந்த ஒரு போதனையும் பரிசுத்த ஆவியின் பகுத்தறியும் துணையின்றி விவிலிய கோட்பாடு இல்லாமல் திருச்சபை வெளிப்படுத்துவதில்லை. இது சாதாரண கத்தோலிக்கர்களும் அறிவர். இறை வார்த்தை அடிப்படையில் தான் மரித்த ஆன் மாக்களுக்காக செபிக்கும்படி, திருச்பை எம்மைக் கேட்கிறது.

திருச்சபையின் ''போதிக்கும் அதிகாரத்திற்கு (மத். 21 19-20) பின்வரும் உதாரணம் சான்று பகரும். இந்த அதிகாரம் தான் தப்பான போதனைகள் கருத்துக்கள் ஆகியவற்றை அவ்வப் போது சாடி

இறைவனின் நற்செய்தியை உலகிற்கு பறைசாற்றி வருகிறது.

ஒரு பெண்ணின் உடல் அவளுக்கே சொந்தம் அவள் தன் உடல் நலம் பேண கருச்சிதைவும் செய்து கொள்ளலாம் என சிசுக்கொலையைச் சட்டமாக்கி நடை முறப்படுத்தும் இக்காலத் தில் பிறமதத்தினரும், ஏன் பிரிந்த சபையினரும் கூட மௌனம் சாதித்தபொழுது, 'தாயின் வயிற்றின் உன்னை நான் உரு வாக்கு முன்பே அறிந்திருந்தேன்' ..(எரே 1:5) என்ற இறை வார்த்தைக் கொப்ப கருச்சிதைவிற்கு எதிராக இன்றும் குரல் கொடுத்துக் கொண்டிருப்பது கத்தோலிக்க திருச்சபை ஒன்று தான். கருச்சிதவை எதிர்த்து, ''உயிர் சங்கிலிப்போராட்டம்'' ''தத்தெடுத்து வளர்ப்போம்'' என மறியல் போரட்டாம் நடத்தி ''நான் உருப்பெற்றதை நீர் அறிந்திருந்தீர்'' (திபா. 139 15) என்ற இறைவார்த்தைக்கு உயிர் கொடுத்து திருச்சபையின் போதனையை சாதனையாக்குபவர்கள் கத்தோலிக்க விசுவாசி கள் ஆவர்.

தனது போதிக்கும் அதிகாரத்தைக் கொண்டுதான், ''மறுமையிலும் மன்னிப்பு பெற வழியுண்டு (மத் 12:32b) என்ற இறைவார்த்தைக்கு இணங்க மரித்த ஆன்மாக்களுக்காக விஷேச விதத்தில் செபிக்கும்படி திருச்சபை எம்மை கேட்கின்றது ''கடைசிக்காசை தீர்க்கும் மட்டும் நீ வெளியேற மாட்டாய் '' (மத் 5:26) ''ஆனால் நெருப்பில் அகப்பட்டுத் தப் பியவர்போல் அவர் மீட்கப் படுவார்'' என்ற இறைவார்த்தைகள் உத்தரிப்பு ஸ்தலம்பற்றி மறைமுகமாய்க் கூறுகின்றன.

திருச்சபை பூமியில் வாழும் மக்களை மட்டும் கொண்டதல்ல பரலோகத்தை நோக்கிப் பயணம் செய்யும் திருச்சபை (எபி 12:1-2) துன்புறும் திருச்சபை (எபி 12:23b) ஜெயம் கொண்ட திருச்சபை (எபி 12:23a) ஆகிய அனைவரையும் புனிதர்களின் சமூகம் ஐக்கியம் என அழைக்கிறோம்.

பரிசுத்தமான இறைவனிடம் நம் ஆன்மாபோய்ச்சேர நம் வாழ்வு பரிசுத்தமானதாய் அமையவேண்டும் ''எல்லோருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர்'' (உரோ 3:23) என இறைவார்த்தை கூறும்பொழுது தவறு செய் யும் சுபாவமுள்ள மனிதன் மரிக்கும் பொழுது பூரண பரிசுத்த நிலையில் இருக்கிறான் என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு? ''மனிதன் பேசும் ஒவ்வொரு பயனற்ற சொல் ஒன்றிற் கும் தீர்வை நாளில் கணக்கு கொடுக்கவேண்டும்''(மத். 12: 36) என விவிலியம் கூறும் பொழுது இறைவனுக்கு ஏற்ப வாழ முனைந்த ஒருவன் ''தூய்மையாக்கப்படும் நிலை ஒன்று'' இருந்தால் தானே அவன் ஆன்மா பரிசுத்தமாக்கப்பட்டு இறைவ னிடம் சேரும். ''பரிசுத்தமாக்கப்படும் நிலையில்'' உள்ளவர் களைத்தான் ''துன்புறும் திருச்சபை'' அல்லது உத்தரிப்பு ஸ்தலம் என திருச்சபை அழைக்கின்றது.

துன்புறும் திருச்சபைக்காக பயணம் செய்யும் திருச்சபையும் ஜெயம் கொண்ட திருச்சபையும் யேசு மூலம் இறைவனிடம் பரிந்து பேசமுடியும். வெற்றிகொண்ட திருச்சபை பயணம் செய்யும் திருச்சபைக்காக செபிக்க முடியும் இக்கோட்பாடு திருச்சபை கிறீஸ்துவின் மறை உடல் ஒரே உறுப்பு மற்ற
உறுப்பிற்கு உதவி செய்கிறது, என்பத்திற்கு இணைய அமைகிறது (1கொரி. 12: 18-26, எபி 1:10). இதுவே

புனிதர்களின் ஐக்கிய சமூக செயல்பாடு. மரித்தோருக்காக செபிக்கும் பழக்கம் பழைய உடன்படிக்கையில் கூட காணக் கூடியதாக உள்ளது (2 மக்கே 12:44). அண்மைக்காலங்களில் ''பரிசுத்தப்படுத்தப்படும் நிலை'' இருக்க வேண்டும் என சில பிரிந்த சபையினர் கூட ஏற்றக் கொள்ளுகிறார்கள்.

இறைவனுக்கு ஒவ்வாத வாழ்க்கை வாழ்ந்திருந்தால் ஆன்மா ஒருபொழுதும் இறைவனிடம் சேர முடியாது. இந்த ஆன்மாவிற்காக செபிப்பதில் எந்த பயனும் இல்லை. இதைத் திருச்சபை திட்ட வட்டமாகப் போதிக்கிறது. கிறிஸ்தவர் எல்லோரும் இதை நன்கு அறிவர். ஆனால் உத்தரிப்பு ஸ்தலம் பற்றி நற்செய்தியாளரின் போதனை ''பரவசப் பேச்சு வரம் இல்லை என்று சிலருக்கும்'', 'அந்த வரம் உண்டு, Benny Hinn கூட அதை பயன் படுத்துகிறாரே'' என்று வேறு சிலருக்கும் கூறுவது போல் இடத்துக்கிடம் வேறுபடுகிறதோ தெரியவில்லை.

விவிலிய அடிப்படையில் திருச்சபை தரும் போதனையை நாம் ஏற்று கார்த்திகை மாசத்தில் துன்புறும் நிலையில் இருக்கக் கூடிய நம் உற்றார் உறவினர் நண்பர்களின் ஆன்மாக் களுக்காக விசேச முறையில் செபிப்போம். அவர்கள் ஆன்மாக் கள் பரிசுத்த மாக்கப்படும் நிலையில் இருந்தால் நம் செபம் நிச்சயமாக உதவி செய்யும். அவர்கள் விரைவில் பரிசுத் தமாக்கப்பட்டு, பரிசுத்தவான்களோடு இணைந்து இறை வனை மகிமைப்படுத்துவார்கள்.

இதற்கு ஆதாரமாக பாப்பரசர் ஆறாவது சின்னப்பர் விசுவாச ஆண்டில் வெளிப்படுத்திய விசுவாச அறிக்கையின் பகுதியை இதில் தரவிரும்புகிறோம்.

மரித்தோர் உத்தானத்தையும் நித்திய வாழ்வையும் விசுவசிக்கின்றோம்.

நித்திய வாழ்வை விசுவசிக்கின்றோம். கிறிஸ்த்துவின் அருளோடு இறக்கும் ஆன்மாக்கள் எல்லாம், அவை உத்தரிப்பு இடத்தில் தூய்மைப் படுத்தப்பட வேண்டியிருந்தாலுஞ்சரி உடலை விட்டுப் பிரிந்தவுடன் நல்ல கள்ளனைப் போல் பேரின்ப வாழ்வுக்கு யேசுவால் அழைத்துச் செல்லப் பட்டாலுஞ்சரி, அவர்கள் யாவரும் சாவுக்குப் பின்வரும் நித்தியத்தில் கடவுளின் மக்களே என்றும், பொது உயிர்ப்பு நாளில் இவ் வான்மாக்கள் தங்கள்

உடல்களோடு மீண்டும் இணையும் பொழுது சாவானது இறுதியாக வெற்றிகொள்ளப் படும் என்றும் விசுவாசிக்கின்றோம்.

யேசுவையும் மரியாளையும் விண்ணகத்தில் சூழ்ந்திருக்கும் பெரும் கூட்டம் விண்ணக திருச்சபையாக அமைந்து, இறை வனை அவர் இருப்பதுபோலவே தெளிவாகக் கண்டு நித்திய பேரின்பத்தை அனுபவித்து. கிறிஸ்த்து தமது மாட்சிமையில் செலுத்தும் ஆட்சியில் வானதூதர்களோடு பல்வேறு படிகளில் பங்குகொண்டு, தங்கள் சகோதரத்துவ அக்கறையினால் நமக்காகப் பரிந்துரைத்து, நமது பெலவீனத்தை உறுதிப் படுத்துகின்றனர் என்று விசுவசிக்கின் றோம்.

கிறிஸ்துவின்மேல் விசுவாசம்கொண்ட அனைவரும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளனர், அதாவது, இவ்வுலகில் பயணம் செய்பவர்களும், சாவின்பின் தூய்மைப்படுத்தப்படுகின்றவர்களும் விண்ணகத்தில் பேரின்பத்தை அனுபவிப்பவர்களுமாகிய மூவ கையினரும் ஒன்றாகக்கூடி ஒரு திருச்சபை என்று விசுவசிக் கின்றோம். கேளுங்கள் கொடுக்கப்படும் என்று யேசு கூறியதுபோல், இவ் ஒன்றிப்பின் நிமித்தம் இறைவனினதும் அவருடைய புனிதர்களினதும் இரக்கப்பரிவு நமது செபங்க ளுக்கு என்றும் செவிசாய்க்கின்றது என்றும் விசுவசிக்கின்றோம். இவ்வாறு நாம் விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் இறந் தோரின் உயிர்ப்பையும் மறு உலக வாழ்வையும் எதிர்பார்க் கின்றோம்.

ஆசிரியர் பீடம்.

சிந்தனைக்கு

கண்ணீர் எனக்குப் பிடிக்கும் அது என் கவலை தீர்க்கும் வரை
உறவுகள் எனக்குப் பிடிக்கும் அது உண்மையாக இருக்கும் வரை
உன்னை எனக்குப் பிடிக்கும் என் உயிர் என் உயிர் பிரியும் வரை

பலருக்கு விருப்பம் உண்டு உன்னை அடைய எனக்கு மட்டுமே உரிமை உண்டு உன்னைக் காக்க
ரோஜாவிடம் சொன்னது முள்.

அருகில் இருந்தால் அருமை தெரிவதில்லை
தொலைவிலிருந்தால் மறக்க நினைப்பதில்லை

யாருடன் வாழ முடியுமோ அவர்களை நேசிப்பதை விட யார் இல்லாமல் வாழ முடியாதோ அவர்களை அதிகமாக நேசியுங்கள்.

பேச வேண்டிய நேரத்தில் அமைதியாக இருந்துவிட்டால் அமைதியான நேரத்தில் நிம்மதியாக இருக்க முடியாது.

உனக்காக யாருமில்லை கவலைப்படுவதை விட யாருக்கும் நீ பாரமில்லை என்று சந்தோஷப்புட.

ஜெபித்துக் கொண்டே இரு நீ வளரும் வரை அல்ல உன்னை வெறுத்தவர்கள் என்னை வாழ்த்தும் வரை.

புன்னகையோடு உறங்கு நாளை இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்காமல் போகலாம்.

இவ்வுலகில் யாரையும் எல்லை மீறி நேசித்து விடாதே நீ எதிர் பார்த்த அன்பு உனக்கு கிடைக்காவிட்டால் அது போல ஒரு துன்பத்தை நீ

பார்வை யார் அடைய வேண்டும்.
(சிறுகதை)

அன்று பாடசாலை விடுமுறை என்றபடியால் சிறுவர்களுக்கு பெரிய மகிழ்ச்சியான நாளாக இருந்தது. அதிகாலையிலேயே சிறுவர்கள் தங்களுக்கு விருப்பமான விளையாட்டைத் தொடங்கினார்கள். சில சிறுவர்கள் ஏதோ ஓர் உயரமான கல்லை நடுத்தெருவிலே வைத்து அதைச் சுற்றி. சுற்றி மகிழ்ச்சியுடன் ஓடி விளையாடிக் கொண்டு இருந்தார்கள். சிறிது நேரத்தின் பின்பு அவர்கள் அந்தக் கல்லை நடுத் தெருவிலேயே வைத்து விட்டுத் தங்களுடைய வீடுகளுக்கு ஓடிப்போய் விட்டார்கள்.
கொஞ்ச நேரம் கழிந்ததும் அந்த வழியால் நடுத்தர வயதுள்ள இரண்டு பெண்கள்
சிரித்துப் பேசிக் கொண்டு வந்த பொழுது பேச்சு சுவாரியத்திலே நடுத்தெருவிலே இருந்த அந்தப் பெரிய கல்லை கவனிக்கவில்லை அதனால் அவர்களில் ஒருவர் கல்லிலே இடறி கால் அடிபட்டு விழுந்து விட்டார். கால் விரலில் இரத்தம் வரத் தொடங்கியது. வலி தாங்க முடியாமல் வாயில் வந்த கடினமான வார்த்தைகளால் திட்டிக் கொண்டு அழுதாள். கூட வந்தவளும் சேர்ந்து சத்தம் போட்டாள்.'வர வர இந்து ஊரவர்கள் கெட்டே போய் விட்டார்கள்.யாருக்கும் பொறுப்பே கிடையாது.இப்படி நடுத்தெருவிலே இந்தப் பெரிய கல்லை போட்டு வைத்து இருக்கின்றார்களே இது நியாயமா? என்று சொல்லி ஊர் சனங்களை விமர்சனம் பண்ணிக் கொண்டே போய் விட்டார்கள்.கொஞ்ச நேரம் கழிந்ததும் உயர்தர மாணவர்கள் இருவர் இந்தத் தெருவில் வந்து கொண்டிருந்தார்கள். தூரத்தில் வரும் பொழுதே கல்லைக் கவனித்தார்கள். அருகில் வந்ததும் ஒருநிமிடம் யோசித்தார்கள் இருவரும் பாடசாலை இல்லங்களுக்கிடையிலான விளையாட்டில் உயரம் பாய்தல் பிரிவில் சேர்க்கப்பட்டு இருந்தார்கள் .அதனால் தங்களுடைய வீரத்தையும் பலத்தையும் காட்ட வேண்டும் என்று இருவரும் பேசிக் கொண்டார்கள். பிறகு கொஞ்சம் பின்னால் போய் வேகமாக ஓடிவந்து
ஜம் என்று அந்தக் கல்லைத தாண்டிக் குதித்தார்கள்.விசில் அடித்தார்கள் போய் விட்டார்கள். அடுத்தபடியாக ஒருகாதல் ஜோடி அன்பாக பேசிச் சிரித்தபடி வந்து கொண்டிருந்தார்கள்.தெருவிலே கிடந்த கல்லைக் கண்டார்கள்.நெருக்கமாக கைகோத்தபடி

வந்தவர்கள். நடுவிலே கல் இருந்தபடியால் கொஞ்சம் நேரம் இரண்டு பேரும் விலகி மறுபடியும் இந்தப் பக்கம் வந்து சேர்ந்து நடந்து போய் விட்டார்கள். கடைசியாக அந்த வழியால் இரண்டு கண்களிலும் பார்வை இல்லாத ஒரு பெரியவர் வந்து கொண்டிருந்தார். அவருடைய கையிலே வழக்கமாக வைத்து இருக்கிற அந்த ஊன்று கோலாலே தனக்கு முன்னால் அப்படியும் இப்படியும் தட்டிப்பார்த்துக் கொண்டு அவர் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தார். வழியிலே இருந்த அந்தக் கல் தட்டுப் பட்டது. உடனே நடுத்தெருவிலே ஒரு கல் இருக்கின்றது என்பதை அவர் புரிந்து கொண்டார். உடனே குனிந்தார். அந்தக் கல்லைத் தடவிப் பார்த்து உருட்டிக் கொண்டு போய் தெருவோரமாய் போட்டார். பிறகு அவர் பாட்டிற்கு வழியிலே நடந்து சென்றார். இந்தத் தெருவிலே பலபேர் வந்தார்கள். போனார்கள் இவர்களிலே பார்வை உள்ளவர் யார்? பார்வை இல்லாதவர் யார்? கொஞ்சம் யோசித்து சிந்திப்போம். செயற்படுவோம். சமுதாயத்தில் பல பேர் இப்படித் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.
கண்ணீருந்தும் குருடர்களாக வாழ்கிறோம். எதற்காக?...........

ஒரு பார்வையும்
சில வார்த்தைகளும்

ஒருமரத்தால் தன்னை உயர்த்திக் கொள்ள முயற்சித்த சக்கேயுவை
ஓருபார்வையால்...
சில வார்த்தையளால்...
எவரெஸ்ற்றில்
ஏற்றிவைத்தார்
இயேசு..

புதிய வாழ்வில் மனிதம் மலர

புதிய வாழ்வில் மனிதம் மலர
புனிதன் இயேசு உயிராய் எழுந்தார்
மனித உறவில் மாண்பு நினைக்கும்
இனிமை நினைந்து பாடுவோம்
இனிமை நினைந்து பாடுவோம் (புதிய)

அடிமைப்பேயின் ஒடுக்கும் தலைகள்
உடைக்க உயிர்த்து வந்தாயோ
எளியோர் சிறையில் ஏங்கும் நிலையை
தவிக்க உயிர்த்து வந்தாயோ
இதயத்தில் நாதங்கள் உரிமையின் வேதங்கள்
இறையவன் ஆட்சியில் சமத்துவ தீபமே
தீபத்தின் வெளிச்சத்தில் இதயங்கள் எழுந்திட
ஆனந்த விடியலில் பயணங்கள் தொடரும்
ஆனந்தப் விடியலில் பயணங்கள் தொடரும் (புதிய)

உறவை மறந்து மடியும் உலகில்
உறவாய் உயிர்த்து வந்தாயோ
நீத் அமைதி மாந்தர் உணர்வில்
ஒன்றிக்க உயிர்த்து வந்தாயோ
வீழ்ந்திடும் உண்மைகள் விழித்திடும் நேரங்கள்
வீதியில் முழங்கிடும் விடுதலை ராகமே
மானிட உறவினில் வாழ்வது சிறந்திட
மாந்தரும் மகிழ்ந்திடும் உயிர்ப்பிது நிகழ்ந்தது
மாந்தரும் மகிழ்ந்திடும் உயிர்ப்பிது நிகழ்ந்தது

உயிர்த்தெழுந்தார்

உயிர்த்தெழுந்தார் உயிர்த்தெழுந்தார்
உயிர்த்தெழுந்தார் உயிர்த்தெழுந்தார்
நம் ஆண்டவர் யேசு
யேசு யேசு உயிர்த்தெழுந்தார்

கல்லறை இருளில் இருந்து
ஒளிக்கு அழைத்தார் அல்லேலுயா
காவின் மீது என்றென்றும்
வெற்றி கண்டார் அல்லேலுயா
அல்லேலுயா
அல்லேலுயா(2)
உயிர்த்தெழுந்தார்.

சிலுவை சாவில் இருந்து
வாழ்வை தந்தார் -அல்லேலுயா
வெற்றிச் சின்னம் சிலுவையே
வெல்லுவோம் உலகை – அல்லேலுர்யா
அல்லேலுயா அல்லேலுயா(2)
உயிர்த்தெழுந்தார்.

சங்கீதச் சிந்தனைகள்

தம் வழியைச் செம்மைப்படுத்துவோர் கடவுளின் மீட்பைக் கண்டடைவர்.
திபா: 50: 8.14.23

என் மீது இரக்கம் வைத்து ஆண்டவரே என்னைக் கண்ணோக்கும். திபா:798.9.11.13

ஆண்டவரது வாக்கினால் வானங்கள் உண்டாயின.
திபா:33: 2-3.4-8

ஆண்டவர் தம் மக்கள் மீது விருப்பம் கொள்கின்றார்.
திபா: 149: 1-2.3-4.5-69

ஆண்டவரின் நியமங்கள் சரியானவை இதயத்தை மகிழ்விப்பவை
திபா19:7.10

ஆண்டவரே எனக்கு அடைக்கலம் தரும் பாறையாய் இரும்.
திபா 31:2-4.17-25

ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர்.
திபா.11-4-6

ஆண்டவரே இரக்கமாயிரும் ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்.

திபா 5:1-6.12:14-17

ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவரே
பேறுபெற்றோர் திபா 1:1 4.6
கடவுளே! நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை.
திபா 51:3-6.18.19

ஆண்டவரே உமது வழியை எனக்கு கற்பியும். திபா 86:1-6

ஆண்டவரே இரக்கமாயிரும் ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்.
திபா 51:3-6. 12-15

ஆண்டவருடைய வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன.
திபா 19:8-10.18

நீதிமான்களை இறைவன் அனைத்துத் துன்பங்களிலிருந்தும் விடுவிக்கின்றார்
திபா 34:4-7.16-19

நொறுங்கிய உள்ளத்தை இறைவா நீர் அவமதிப்பதில்லை
திபா 10-11.16-17

ஆண்டவரே நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவிசாய்த்தீர்
திபா 138:1-8

நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால் யார் தான் நிலைத்து நிற்க முடியும்.
திபா 130:1-8

தாவீது வழி மரபு என்றென்றும் நிலைத்திருக்கும்.
திபா : 89:2-5.27.29
ஆண்டவரே உமது பேரன்பு எங்கள் மீது இருப்பதாக.
திபா 33:4-5.18.19.20.22

ஆண்டவரே எம் பாவத்திற்கு ஏற்றபடி எம்மை நடத்தாதேயும்
திபா: 79: 8.9.11.13

தம் வழியை செம்மைப்படுத்துவோர் கடவுளின் மீட்பை கண்டடைவர். திபா: 50:8-9.16-17-21-.23

ஆண்டவரே உம் பேரன்பால் என்னை விடுவித்தருளும்
திபா:31:5-6.14.15.16

ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவரே பேறு பெற்றோர்.
திபா: 1:1-2 3-4.6

உம் திருவுளம் நிறைவேற்ற இதோ வருகிறேன். திபா:40:7-10
ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர். திபா:10:1-4.9-12

உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர்.ஆண்டவர் குரலைக் கேட்டிடுவீர்.
திபா: 95: 1-2.6-9

என் நெஞ்சம் உயிருள்ள இறைவன் மீது தாகம் கொண்டுள்ளது.
திபா: 42:2-3:43:3-4

ஆண்டவரே உமது இரக்கத்தையும் .உமது பேரன்பையும் நினைத்தருளும். திபா: 25:4-

9எருசலேமே! ஆண்டவரைப் போற்றுவாயாக. திபா:147:

"பரம்பொருள்"

கத்தோலிக்க நிகழ்ச்சி
கீதவாணி வானொலியில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை
3.00மணிதொடக்கம்
4.00மணிவரை நடைபெறும்.
ஐறறற.பநநவாயஎயயளெ.உ.ழஅஎன்ற இணையதளத்தின் மூலமும் கேட்கலாம்.
போராடும் இவ்வுலகில் இறையாசீர் உங்களுக்கு……
பாதுகாப்பார்…..இப்போதும் எப்போதும் ஆண்டவர்
உம்மைக் காத்தருள்வார்" (திருப்பாடல் :121 :7-8)

பரிசுத்தரே ! ஆண்டவரே! உம்மை ஆராதிக்கிறேன்
விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசரே! உம் பாதம்
விழுந்து உம்மை துதிக்கிறேன்.
கடவுளே எல்லாம் வல்லவரே! எல்லாம் நிறைந்தவரே!
உம்மை துதித்துப் போற்றுகிறேன்.
எல்லாத் துன்பங்களையும் எல்லாப் பாரங்களையும்
தாங்கி வருகிறேன். உம் காலில் விழுந்து
கிடக்கிறேன்
ஆண்டவரே ! உம்மையே நம்பி இருக்கிறேன்
நீரே எனக்கு அரனும் கோட்டையுமாய் இருக்கின்றீர்!
இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே உம்மை முற்றுமாய்
நம்பி
உம் கால்களையே பிடித்துக் கொள்கிறேன்.

ஆண்டவரே! என் பயங்களையும் என் திட்டங்களையும்
ஏன் கனவுகளையும் எனது எதிர்ப்புக்களையும்
உம்மிடமே வைக்கிறேன் உம்மை நோக்கியே
என் கண்களை உயர்த்துகிறேன்.
ஆண்டவரே ! என் கால்கள் இடறாதபடி என்னைக்
காத்துக் கொள்ளும. உமது கண்களை
உயர்த்துகிறேன். ஆண்டவரே ! என் கால்கள்
தள்ளாட விடாமல்
என்னைக் காத்துக் கொள்ளும். உமது கண்களை
என் மேல் பதித்துக் கொள்ளும். யாவே என்
ஆண்டவரே ! நீர் உறங்கிவிட மாட்டீரே!

என் ஆண்டவரே! என் வலப்பக்கத்தில் எனக்கு
துணையாக இருந்தருளும்.˙.
குடும்பத்தையும் (கணவன்.மனைவி.பிள்ளைகள்.
வேலை .படிப்பு எனக்குரியவர்கள் அனைவரையும்
ஆண்டவரே காத்தருளும்.

உமது கரங்களை நீட்டி என்னை ஆசீர்வதியும்.
இன்றும் என்றும் இந்த ஆண்டு முழுவதும் என்னை
ஆசீர்வதியும். உமது இதயத்திற்கு இதமாய் இருக்க
என் இதயம் புனிதமாய் இருக்க இனிமையாய் இருக்க
உமக்கு பிரியமாய்இருக்க
என்னைத் தொட்டருளும். என்னைக் காத்தருளும்.
கன்னி மரியே! பூரணமே! எமக்காக பரிந்து பேசும்

நன்றி ஆண்டவரே! என் விண்ணப்பத்தை
கேட்டதற்காய் நன்றி.
ஆமென்.

கவிதைப் பூக்கள்

தியாகம்
அவன் தொலைபேசியில்
அவளோடு உரையாடினால் இப்படி
“அன்பே வருகிற வியாழன்
உன்னுடைய பிறந்தநாள்!

ஆச்சரியமான பரிசு ஒன்றை
உனக்குத் தர இருக்கிறேன்

அதனால்......என் அன்பே....இன்று மாலை
உன்னைச் சந்திக்க நான் வரும் போது
ஒரு ஐந்துாறு ரூபாய் எனக்குத் தருவாயா?

காற்றில் கலந்த கவிதை

சிறகில் இருந்து
பிரிந்த இறகு
பறவையின் பாடலை
காற்றில் எழுதிச் சென்றது

“வெடித்துச் சிதறும்
குண்டுகளின் சத்தமும்
காற்றில் கலக்கும்
கந்தக வாயுவும்
எம் சுதந்திர இருப்பை
சீர்குலைத்து விட்டன”

தடங்கள்

மற்றவர் வாழ்வைப் பெற
தன் வாழ்வைக் கொடுப்பவன்

அவன் வாழ்வின் முடிவு
ஒரு தேசத்தின் விடிவு
அவனது அடக்கம்
ஒரு தேசத்தின் தொடக்கம்
தீக்குச்சியின் தீபமாய்
அவன் ஒளிர்ந்து
சுடர்களை ஏற்றிவிட்டு
அணைந்து போகின்றான்
அவன் ஏற்றிய தீபங்கள்
தொடர்ந்து சுடர்களை ஏற்றுகின்றன!

தேடி... நரகத்தின் வாசல்களுக்காய் பயணம்
தொடருவோமா?.........அன்றி
கிறிஸ்துவுக்காய்..... நல்வழி நாடி.......
பசியுடன் வாடி..... சொர்க்கத்தின் வாசலைத் தேடி
போவோமா?
விடை தேடும் வினாக்களும் கேள்விக் குறிகளும்
....
பாதையில்.... வெளிச்சம்....!
கால்களில் தள்ளாட்டமில்லை! முதுகு நிமிந்தது
போக வேண்டியது மீதமிருந்தது தேவ
வார்த்தைகள் போசனமாய் அருள் தேடும்
ஆகாரமாய்
இப்போ பசி இல்லை... தாகமில்லை....
தாகம் அவரில் தான்
அவர் வார்த்தைகள் ஜீவத்தண்ணீராய்
அவர் பாடுகள் இதமாய்
சிலுவை சுமையற்று எளிதாகி
நுகம் இலகுவாகியது
சுமக்கும் திராணியைத் தந்தார் தேவமைந்தன்...
சோதனைகள் தந்து - தாங்கும் திராணியும் தந்து...
அன்புக்கரங்களால் ஆரத்தரையில்
தன் காயங்களின் தழும்புகளால்
என்னைக் குணமாக்கினார்.........
என் பாதையில் எனக்கு முன்னே அவர்!
பாதையில் முட்கள் இல்லை... மனதும் இதமாகி
மகிழ்ச்சியாய் அதோ அந்த பரலோக ராஜ்யத்தை
நோக்கி என்பாதம் பாவவழிகளை விட்டு
பாதைமாறி விசுவாசத்திடன் புதுப்பயணம்
போராட்டமின்றி தொடாகிறது. கர்த்தர் நல்லவர்
அவர் கிருபை எமக்கு என்றும் உள்ளது. ஆமென்

உயிர்த்த இறைவனின் விசுவாசத்தில் உங்களை வாழ்த்துகிறோம் நன்றி.



அன்புமக்களே பற்றிய உமதுகருத்துரைகள்

எமது தொலை பேசி சேவை இலக்கம் (416) 696-9243 கருத்துக்கள் கேட்டு அறிவதற்கு தொலை பேசியில் பதிவு செய்யுங்கள். அல்லது எங்கள் சேவை முகாமையாளர் திங்கள் தொடக்கம் சனிக்கிழமை வரையும் காலை 10:00 மணி தொடக்கம் பி.ப 6:00 மணிவரையும் அலுவலகத்தில் தொலைத் தொடர்பு மூலம் உரையாடலாம். உங்கள் கருத்துக்கள் கணிக்கப்பட்டு எமது இதழ் சிறப்புற வழி வகுக்கும். இந்தச் சேவை ஆரம் பித்தபடியால் நாம் பலருடைய அபிப்பிராயங்களை நேரடியாக அறிந்து ஆவன செய்கிறோம் நன்றி.

நீங்கள் மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள் மத் 3:8.

கத்தோலிக்க திருச்சபையை ஆட்சி செய்த பாப்புமார் சுயசரிதைச் சுருக்கம்.

இம்மனுவேல் யோசேப்

மக்கள் மீட்சிக்காக மனுமகன் யேசுகிறிஸ்த்து புனித மரியன்னை வழியாக மானிட ரூபமெடுத்து பூவுலகிற்கு வந்தார். அவர் பூவுலகில் 33 வருடங்கள் வாழ்ந்தபோதும், ஆரம்பகால வாழ்க்கையில் மூன்று இராசாக்கள் வந்து சந்திக்கிறபோதும், ஏரோதன் கொல்லத்தேடுகிறவேளையிலும், ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புகொடுக்கையிலும், திரு விழாவுக்கு சென்றுதிரும்புகையில் ஆலயத்தில் தங்கியபோதும், கானாவூர் கலியாணவீட்டில் நீரை இரசமாக்கியபோதும் அவரது 30 வருட வாழ்க்கையில் காணப்படுகிறார். இதற்கு மேலான 3 வருடங்களிலும் தாம் இறைமகன் கிறிஸ்த்து என்பதை பலசெயல்களினால் எடுத்தியம்புவதைக் காண்கிறோம்.

இந்த 3 வருட காலத்தில், உன்னை மனிதர்களைப்பிடிப் பவனாக்குவேன் என கூட்டிச்சென்ற இராயப்பரின் தலைமையில் திருச்சபையை ஆரம்பித்து வைத்தார். அன்று இராயப்பரை முதல் தலைவராகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட திருச்சபை பலரைச் சிறைக்குக் கொடுத்தும், பலஉயிர்களை வேதசாட்சிக ளாகக் கோடுத்தும் இன்று 263வது பாப்பரசராக 2ம் அருளப்பர்-சின்னப்பரை தலைவராகக் கொண்டுள்ளது. இந்த 263 பாப்பரசர்களின் சுயசரிதையினை சுருக்கமாகத் - தருகிறோம்.

இவற்றைத் தயாரிப்பதற்கு 1. பாப்பரசர்களின் ஒக்ஸ்போட் அகராதி- ஜே.டீ.என்.ஹெலியால் எழுதப்பட்டதும், 2.திருச் சபையை ஆட்சிசெய்த பாப்புமாரின் சுருக்கமான தமிழாக்கம்- ஆர்.சீ.மரியரெட்டினத்தால் எழுதப்பட்டதுமான புத்தகங்கள் பாவிக்கப்பட்டன.

கத்தோலிக்க திருச்சபைப் பாப்பரசர்கள்

2000 ஆண்டுகளுக்குமுன் இயேசுக்கிறிஸ்துவினால் புனித இராயப்பரின் தலைமையின்கீழ் நிறுவப்பட்ட கத்தோலிக்க திருச் சபை உலகடங்கிலும் 90 கோடிக்கு மேற்பட்ட மக்களைக் கொண்டுள்ளது. இன்றைய ஆண்டுவலை 263 பாப்பரசர்களைக் கண்டுள்ளது. முதலாவது பாப்பரசர் புனித இராயப்பர், இன்றைய பாப்பரசர் 2ம் அருள்-சின்னப்பர். இயேசு பிலிப்புச் செசாரியா நகரில் இராயப்பரை நோக்கி உன் பெயர் பாறை இந்தப்பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன், நரகத் தின் வாயில்கள் அதன்மேல்வெற்றிகொள்ளா (மத்.16.18) எனக்கூறி 12 அப்போஸ்தலர்களுடன் ஆரம்பிக்கப்படடது. சில காலங்களில் சிறு சிறு காரணங்களுக்காக பிரிந்து சென்றது முண்டு. 16ம் நூற்றாண்டில்இப்படிப் பிரிந்து சென்றவர்கள் புரட்டஸ்தாந்து, அங்கிலிக்கன் சபைகளை உருவாக்கியுள்ளனர், இருந்தும் கத்தோலிக்க திருச்சபை ஆல்போல் தழைத்து வந்துள்ளது.

திருச்சபைப்பாப்பரசர்கள் ஆழமான கருத்துப் பரிமாறல்களுக் குட்பட்ட ஒன்றாக விளங்கி இன்று முற்று முழுதாக ஆன்மீக தலைவர்களாக விளங்குகின்றபோதிலும் சில வருடங்களில் அரசியல்தலைவர்களாகவும் இருந்துள்ளனர். சில பாப்பரசர்கள் படைகளையும் தலைமை தாங்கிச் சென்றுள்ளனர். கிறிஸ்த வத்தை எதிர்த்த அரசர்களால் அநேகர் வேதசாட்சிகளாக மரித்துள்ளனர். திருச்சபைக்கு தொகை அல்ல முக்கியம் வகைதான் முக்கியம் என்பதனை பாப்பரசர்கள் நிலைநாட்டியுள் ளனர். பாப்பரசர் பதவி புனிதமானது இயேசுவின் பிரதிநிதிக ளாகச் செயற்படுபவர்கள், அதனால்தான் ஆரம்பகால 6 நூற்றாண்டுகளில் பதவி வகித்த 64 பாப்பரசர்களில் 56பேர் புனிதர்களாகப் பிரகடனப்பவடுத்தப்படடனர். அதன்பின் வந்த 199 பாப்பரசர்களில் 23 பேர் தான் புனிதர்களாக்கப்பட்டனர்.

பாப்பரசர் வாசஸ்தலம் ரோமி லுண்டு, கலகங்கள், அரசியல் குழப்பங்கள், எதிர்பாப்புமாரி னால் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக சில பாப்பரசர்கள் ரோமுக்கு வெளியேயும் தெரியப்பட்டும் அங்கு வசித்தும், இறந்ததும் உண்டு. இருந்தும் அன்று கிறிஸ்து கூறிய 'நரகத்தின் வாயில்கள் அதன்மேல்வெற்றி கொள்ளாது' என்பதற்கொப்ப இன்று திருச்சபை உலகெலாம் தன்னை வளர்த்து வருகிறது.

2013 k ஆண்டு நிகழ்ச்சி நிரல்கள்.

இரண்டாயிரத்தி பதிமூன்றாம் ஆண்டு திருச்சபை விசுவாசத்தின் ஆண்டாக பிரகடணம் செய்துள்ளது.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 5.00 மணிக்கு தமிழில் லூர்து மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

மாதத்தின் முதல் சனிக்கிழமை 7.00 மணிக்கு தமிழில் லூர்து மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

சிலுவைப் பாதை

1.. தபசு காலத்தில் ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் மாலை 5:45 மணிக்கு சிலுவைப்பாதை புனித லூர்து மாதா
தேவாலயத்தில் நடைபெறும்.